பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,

மலர்: 20] சென்னை: ஆவணி 28 (13—9—72) புதன் வெளியூர்: ஆவணி 29 (14—9—72) வியாழன் [இதழ்: 76

## அரசுப் பணிகளில் இந்தி பயன்படுத்தப்படுகிறதா?- அதிகாரி தரும் பதில்

புதுடில்லி, செப். 13—

''அரசாங்கம் பணியாளர்களுக்கு இந்தியைப் பயன்படுத்துவது பற்றி அரசு எந்தவிதமான முடிவையும் எடுக்கவில்லை; 1969-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட முடிவுதான் செயல்படுத்தப்பட்டு வருகிறது''

என்று உள்நாட்டு அமைச்சகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# விலைவாசி உயர்வின் பயங்கரம்

## இந்திரா காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தின் அச்சம்

### 'தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்' என்கிறார் இந்திரா காந்தி

புதுடில்லி செப். 13—

''மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பொருட்களை நியாய விலையில் கிடைக்கச் செய்ய, நாடு முழுவதும் நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டும்''

என்று இங்கு கூடிய இந்திரா காங்கிரசுச் செயற்குழு, அரசினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

பருப்பு வகைகள் -- சர்க்கரை போன்றவை மட்டுமல்லாது துணி -- மண்ணெண்ணெய் -- அரிசி -- கோதுமை ஆகியவைகளும் நியாய விலைக் கடைகளில் வழங்கப்பட வேண்டும்'' என்றும் குழு கருத்தறிவித்திருக்கிறது.

குழுவின் கூட்டம் சுமார் 3 மணி நேரம் விலை உயர்வுப் பிரச்சினை பற்றி விவாதித்தது; எல்லா உறுப்பினர்களும் விலை உயர்வு பற்றிக் கவலை தெரிவித்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்து இருக்கவில்லையாயினும், 'ஆளைவருக்கும் பங்கீட்டு அட்டை வழங்கி--அவர்களின் குறைந்த அளவுத் தேவையையாவது நியாய விலைக் கடைகள் மூலம் நிறைவேற்ற வேண்டும்' என்று அனைவரும் கருத்துத் தெரிவித்தனராம்; 'இந்தப் பொருட்கள் வெளிச் சந்தையிலும் விற்கப்பட வேண்டும்' என்று அவர்கள் வற்புறுத்தினராம்.

''உணவுப் பொருட்கள் மட்டுமன்றி சைக்கிள் டயர்கள்--டியூபுகள்--பாட்டரிகள்--பிளேடுகள்--மருந்துகள் ஆகியவையும் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்க வகைசெய்ய வேண்டும்'' என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிறியவர்கள்--பெரியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது 10 கிலோ கிராம் சர்க்கரை வழங்கப்பட வேண்டுமென்றும், இதற்காகத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் கூட்டம் கேட்டுக்கொண்டது.

இன்றியமையாப் பண்டங்களைக் கொள்முதல் செய்வதற்கு எல்லா முதலமைச்சர்களின் ஒத்துழைப்பையும் செயற்குழு கோரியது.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி மற்றும் மத்திய அமைச்சர்கள்--பெரும்பாலான முதலமைச்சர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

விலைவாசி உயர்வு நிலைமையின் பயங்கரத்தை அரசு முழுமையாக உணர்ந்திருப்பதாகவும், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தலைமையமைச்சர் கூறியதாகத் தெரியவருகிறது.

## மத்தியப் பிரதேச கதர் வாரியத்தில் ஊழல்

போபால், செப். 13—

மாநில கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியம் செயல்படும் முறை பற்றி விசாரணை ஒன்றை நடத்த மத்தியப் பிரதேச அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இந்த வாரியத்தில் இலஞ்சமும்--ஊழலும் நடைபெறுவதாகப் புகார் வந்ததைத் தொடர்ந்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## பருத்திக்கொட்டையை சாப்பிடும் நிலை

பெங்களூர், செப். 13—

''மைசூர் மாநிலத்தின் சில பகுதிகளில் கடும் வரட்சி நிலவுகிறது; மக்கள், பருத்திக் கொட்டையைச் சாப்பிடும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்''

என்று, மைசூர் மாநில இந்திரா காங்கிரசு செயற்குழு உறுப்பினர் கொல்லூர் மல்லப்பா கூறியிருக்கிறார்.

# கழகத் தோழர்கள் மீதான நடவடிக்கை

## வருத்தம் தெரிவித்தவர் பேரில் நீக்கம்

சென்னை, செப். 13—

''நேற்று சென்னை சட்டமன்ற தி. மு. கழக அலுவலகத்தில் கழகத் தலைவர் கலைஞர் -- பொதுச் செயலாளர் நாவலர் -- இணைப் பொதுச் செயலாளர்கள் என். வி. நடராசன், க. இராசாராம் ஆகியோர், அண்மையில் தலைமைக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்ட தோழர்களை அழைத்து -- அவர்கள் வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதங்களை ஏற்று -- முடிவுகள் எடுத்தனர்.

சில கிளைக் கழகத் தோழர்களையும் அழைத்து -- அவர்களுக்கிடையே உள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்து -- சுமுகமான நிலை தோன்றிட வழி காட்டினர்.

தலைமைக் கழகத்தால் தற்காலிக நடவடிக்கை எடுக்கப்பட்ட விழுப்புரம் முன்னாள் வட்டச் செயலாளர் செயராமன் வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதத்தை ஏற்று -- மீண்டும் அவர் வட்டச் செயலாளராகப் பணியாற்றலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

அதுபோன்றே நடவடிக்கை எடுக்கப்பட்ட வட்டத் துணைச் செயலாளர் சாமிக்கண்ணு வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதத்தை ஏற்று -- மீண்டும் அவர் அந்தப் பதவியில் பணியாற்றலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

குமாரபாளையம் ஜே. கே. கே. அங்கப்பன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை -- அவர் வருத்தம் தெரிவித்து எழுதிய கடிதத்தை ஆராய்ந்த பின்னர் ரத்து செய்து -- மீண்டும் அவர் கழக உறுப்பினராகப் பணியாற்றலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது.

அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் இராமனுதன் மீதுள்ள சில குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, 'இன்னும் சில விவரங்கள் வர வேண்டியிருப்பதால் அதுபற்றிப் பின்னர் ஆராயலாம்' என்று முடிவு எடுக்கப்பட்டது.

திருவள்ளூர் கிளைக் கழகத்தினரிடையே உள்ள குழப்பங்களை ஆராய்ந்து, 'தொடர்புடையவர்களை அழைத்துக் கழகத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்க வேண்டும்' என்று கழகத் தலைவரும் -- பொதுச்செயலாளரும் அறிவுரை கூறினர்.

கழகத் தொழிற் சங்கப் பேரவையைச் சார்ந்த பொன்மலைச் சங்கக் கிளை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆராயப்பட்டது; மறுபடியும் உறுப்பினர்கள் சேர்த்துத் தேர்தல் நடத்தலாம் என்றும், அதுவரை இருசாராரும் கொண்ட தற்காலிகக் குழு (அட்டாக் குழு) ஒன்று நிறுவுவது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

சிதம்பரம் நகரிலிருந்து தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் -- நகராட்சித் தலைவர்--நகரச் செயலாளர் ஆகியோரை அழைத்து-- அங்கிருக்கும் பிரச்சினைகள் பற்றி விசாரித்து -- அவர்களுக்கிடையே ஒரு சுமுகச் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது; கழகத் தலைவர் கலைஞரும்--பொதுச் செயலாளர் நாவலரும் அறிவுரை கூறினார்கள்.

இத்தகவலை கழகத் துணைப் பொதுச் செயலாளர் என்.வி. நடராசன் செய்தியாளர்களிடம் கூறினர்.

இக்கூட்டத்தில், அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் கலந்து கொண்டார்.

## பிற மாநிலங்கட்கு உணவுப் பொருள் ஏற்றுமதி செய்யப்படுமா?

### தமிழ்நாடு உணவு அமைச்சர் தரும் தகவல்

தஞ்சாவூர், செப். 13—

''தமிழ்நாட்டு மாவட்டங்கள் சிலவற்றில் நிலவும் வறட்சி நிலைமையினால், இம்மாநிலத்து உணவு நிலை பாதிக்கப்படக் கூடும்; இந்நிலையில், வேறு எந்த மாநிலங்கட்கும் உணவுத் தானியங்களை ஏற்றுமதி செய்யும் நிலையில் தமிழகம் இல்லை; இத்தகவலை மத்திய அரசுக்கும் தெரிவித்துவிட்டோம்''

என்று உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்கள், தஞ்சை நகரில் செய்தியாளர்கட்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

''அண்டை மாநிலங்கட்கு உணவுத் தானியங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கத் தமிழகத்து எல்லைகளில் காவல் பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடத்தல் குற்றவாளிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.''

## வன்முறை நிகழ்ச்சிகள்

### எதிர்க் கட்சிகள்மீது இந்திரா காங்கிரசு குற்றச்சாட்டு

புதுடில்லி, செப். 13—

வன்முறை நிகழ்ச்சிகள் அதிகமாகி வருவது குறித்து இங்கு கூடிய காங்கிரசு செயற்குழு மிகுந்த கவலை தெரிவித்திருக்கிறது.

''இந்த வன்முறைகளுக்கு, எதிர்க் கட்சிகளே காரணம்'' என்றும் செயற்குழு கூறியிருக்கிறது.

## கிராமக் குடிநீர் திட்டம்

### ரூ. 20 கோடி ஒதுக்கீடு

புதுடில்லி, செப். 13—

கிராமங்களுக்குக் குடிநீர் வசதி வழங்கும் திட்டத்தின்படி, நாடெங்கிலுமிருந்து 12,807 கிராமங்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது; இதற்காக மொத்தம் ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

முதற்படியாக இத் திட்டத்திற்கு ரூ. 4.12 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசுகளின் திட்டத்தில் சேராத இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு முழு நிதியுதவியும் அளிக்கும்.

## பயிர்களுக்கு இன்ஷ்யூரன்சு பாதுகாப்புத் திட்டம்

### இப்போது தேவையில்லையாம் -- மத்திய அமைச்சரவை முடிவு

புதுடில்லி, செப். 13—

''பயிர்களுக்கு இன்ஷ்யூரன்சுப் பாதுகாப்பு அளிக்கும் திட்டத்தை இப்போது மேற்கொள்ள வேண்டியதில்லை''

என்று மத்திய அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

இதைப் பற்றி நிபுணர்கள் குழு ஒன்று அனுப்பியிருந்த ஓர் அறிக்கையைப் பரிசீலனை செய்த பிறகு அமைச்சரவை இந்த முடிவுக்கு வந்தது.

இப்போது இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவதில் உள்ள பெரும் சிரமங்களைக் குழு தனது அறிக்கையில் எடுத்துக்காட்டியிருந்தது.

## ஏழைகளுக்கு இலவசத் திருமணம்

### காஞ்சியில் நடைபெறுகிறது

காஞ்சிபுரம், செப். 13—

காஞ்சிபுரத்தில், நாளை காலை 9-மணியளவில், ஏகாம்பரநாதர் கோவிலில் 10 தம்பதியருக்குத் திருமணம் நடைபெற்றது.

மணமக்களுக்குக் கோவில் நிதியிலிருந்து வேட்டி --- துண்டு,

(4-ம் பக்கம் பார்க்க)

# குடும்பப் பிரச்னை -- கலைஞர் அறிவுரை

திருவொற்றியூர், செப். 13—

'குடும்பப் பிரச்சினைகளை--நமது குடும்பத்திற்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும்--அடுத்த வீட்டுக்காரனுக்கு இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டும்.

'இது ஒரு கிளைக் கழகத்திற்கு--வட்டக் கழகத்திற்கு மட்டுமல்ல; மாவட்டத்திற்கும் -- மாநிலங்களில் பரவியுள்ள நம்முடைய கழகத் தலைமைக்கும் பொருந்தும் கொள்கையாகும்."

--முதலமைச்சர் கலைஞர்

(திருமண விழாவில்)

# வேளாண்மை உற்பத்தி-- பெருக்குவதற்கு முயற்சி

## நீர்ப்பாசனத்தின்கீழ் 150 இலட்சம் ஏக்கர் நிலத்தைக் கொண்டுவரத் திட்டக் குழு முடிவு

### வேலைவாய்ப்பு ஏற்படுத்த--தேவைகளை நிறைவு செய்ய ரூ. 5,700 கோடியில் திட்டங்கள் வகுக்கப்படும்

புதுடில்லி, செப். 12—

ஐந்தாவது திட்டத்தில் பெரும் அளவில் வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய முறையிலும், தேவையை நிறைவு செய்யக்கூடிய முறையிலும் வேளாண்மைத் தொடர்பான திட்டங்களை வகுக்கத் திட்டக் குழு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

போதுமான நீர்ப்பாசன வசதி பெறும் பகுதிகளுக்கு மட்டுமல்லாது புன்செய் விவசாயம்--மற்றும் உற்பத்தியை அதிகரிப்பது கடினமாக இருக்கும் பகுதிகளில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

விவசாயத்திற்கும் -- அதைச் சார்ந்த பணிகளுக்கும் ரூ. 5,700 கோடி ஒதுக்கப்படும்; நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 1,900 கோடி ஒதுக்கப்படும்.

சுமார் 18 இலட்சம் ஹெக்டேர் (45 இலட்சம் ஏக்கர்) நிலப்பரப்பை வெள்ளசுதிலிருந்து பாதுகாப்பதற்காக ரூ. 300 கோடி செலவிடப்படும்; 4-வது திட்டத்தில் இவ்வகைகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 3,200 கோடியாகும்.

விலைகளை நிலைப்படுத்துவதற்கும் பொது விநியோக ஏற்பாடுகளை விரிவுபடுத்தவும் -- குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் பாதுகாப்புத் தரவும் திட்டக் குழு விரும்புகிறது.

போதுமைக்கு ஆண்டுதோறும் ரூ. 150 கோடி மானியம் அளித்துவருவதை நிறுத்தக்கூடிய முறையில் விலைக் கொள்கையைத் திருத்தியமைப்பது அவசியம் என்று கருதப்படுகிறது.

70 இலட்சம் டன் உணவுப் பொருள்கள் இருப்பு வைக்கப்பட வேண்டுமென்றும், இவைகளில் கணிசமான பகுதி அரிசியாக இருக்கவேண்டுமென்றும் திட்டக் குழு கருதுகிறது.

ஐந்தாவது திட்டத்தில் 60 இலட்சம் ஹெக்டேர் (150 இலட்சம் ஏக்கர்) நிலத்தை நீர்ப்பாசனத்தின் கீழ்க் கொண்டு வருவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது; அப்படிக் கொண்டுவந்தாலும், ஏற்றத் தாழ்வுகளை முழுவதுமாக அகற்றி விட முடியாது" என்று திட்டக் குழு கூறுகிறது.

ஐந்தாவது திட்டத்தில் விவசாய உற்பத்தி (காமபவுண்டு விகிதத்தில்) ஆண்டுதோறும் 5 சதவிகிதம் உயரவேண்டும் என்பது குறிக்கோள்; 4 வது திட்டத்தில் இது 4·30 சதவிகிதமாக இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

நெல், பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் ஆகியவைகளின் உற்பத்திப் பெருக்கத்தில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை மீன் பிடிப்பு, பொதுப்பணி ஆகியவைகளின் மூலம் வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டுமென்பது திட்டமாகும்.

ஐந்தாவது திட்ட இறுதிக்குள் உணவுப் பொருள் உற்பத்தியை 14 கோடி 30 இலட்சம் டன்னாக உயர்த்த வேண்டும் என்பது தற்காலிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிக்கோள் அளவாகும்; நான்காவது திட்ட இறுதியில் இது 11 கோடி 80 இலட்சம் டன்னில் நிற்கும்.

மற்றும் பஞ்சுக்கு 80 இலட்சம் பேல -- சணலுக்கு 70 இலட்சம் பேல்--எண்ணெய் வித்துக்களுக்கு 125 இலட்சம் டன்-- கரும்புக்கு 170 இலட்சம் டன் என்று குறிக்கோள் அளவுகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

# போனசுப் பரிசீலனைக் குழுவின் இடைக்கால அறிக்கைகள்

## உடன்பாடற்ற நிலை--டில்லியின் முடிவு என்ன?

புதுடில்லி, செப். 13—

போனசுப் பரிசீலனைக் குழுவின் இறுதிக் கூட்டத்தில் குறைந்தபட்ச போனசைப் பற்றி உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

குழுவில் உள்ள 4 உறுப்பினர்களும், 'எல்லா நிறுவனங்களும் 8.33 சதவிகிதப் போனசு தரவேண்டும்' என்று சிபாரிசு செய்தனர்; மற்றும் 4 உறுப்பினர்கள், 'இலாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச போனசு 8 33 சதவிகிதம் என்றும், மற்ற நிறுவனங்களுக்கு 5 சதவிகிதம் என்றும் நிர்ணயிக்கப்பட வேண்டும்' என்று சிபாரிசு செய்தனர்.

இதன் காரணமாக, குழுவின் சார்பில் மத்திய அரசிடம் இரண்டு இடைக்கால அறிக்கைகள் தாக்கல் செய்யப்படும்.

பெரும்பாலான மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள், ஏற்கனவே 8.33 சதவிகித குறைந்தபட்ச போனசை ஆதரித்திருப்பதால், அதற்கு அரசு ஒப்புக்கொள்ளக்கூடும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

குறைந்தபட்ச போனசை 4 சதவிகிதத்திலிருந்து 8.33 சதவிகிதத்துக்கு உயர்த்தப் போனசுச் சட்டத்தைத் திருத்துமாறும், இல்லாவிடில் தாங்கள் தனியாக சட்டம் இயற்ற அனுமதிக்குமாறும் மத்திய அரசை, மாராட்டிரமும் -- தமிழ்நாடும் கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

1970--71-லிருந்து 8 33 சதவிகித போனசு அளிக்கப்பட வேண்டும் என்று தங்கள் அறிக்கையில் தொழிலாளர் பிரதிநிதிகளும் -- அரசுத் துறைப் பிரதிநிதியும் சிபாரிசு செய்தனர்.

1970-க்கு முன்பு ஏற்பட்ட போனசு ஒப்பந்தங்கள் சம்பந்தமாக அந்த ஆண்டுகளுக்கும் 8.33 சதவிகித அடிப்படையில் போனசு வழங்க சிபாரிசு செய்தனர்.

# போலீசு அதிகாரிகட்கு அண்ணா பதக்கம்

## முதலமைச்சர் கலைஞர் காஞ்சியில் வழங்குகிறார்

தமிழ்நாடு போலீசுத் துறை-- தீயணைப்புப் படை ஆகியவற்றில் சிறப்பாகப் பணியாற்றியதற்காகவும், வீரச் செயல் புரிந்ததற்காகவும் இந்த ஆண்டில் 25 பேர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்--'அண்ணா பதக்கம்' வழங்கும் விழா, இன்று மாலை காஞ்சிபுரத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டம் போலீசு நிலையத்தின் எதிரில்-- அண்ணா காவல் அரங்க'த் திடலில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அண்ணா பதக்கங்களை வழங்கிப் பேசுகிறார்.

விழாவுக்கு, போலீசு இன்ஸ்பெக்டர்--ஜெனரல் எப். வி. அருள் தலைமை தாங்குகிறார்.

விழாவுக்கு முன்னதாகப் போலீசாரின் சிறப்பு அணிவகுப்பு நடைபெறுகிறது; அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக் கொள்வார்.

சிறப்பு மிக்க பணியாற்றியதற்கான போலீசுப் பதக்கம் 22 பேர்களுக்கு வழங்கப்படுகின்றன; அவர்களுக்கு ரொக்க மானியமும் அளிக்கப்படும்.

வீரச் செயல் புரிந்ததற்காக மூன்று போலீசாருக்கு முதலமைச்சரின் போலீசுப் பதக்கம் வழங்கப்படுகிறது; அவர்களுக்குத் தலா ரூ. 3,000 ரொக்க மானியமும் தரப்படுகிறது.

ரூ. 3,000 மானியம் பெறுவோர் 3 பேர்.

ரூ. 2,000 மானியம் பெறுவோர் 10 பேர்.

ரூ. 1,000 மானியம் பெறுவோர் 6 பேர்.

# அண்ணா பிறந்த நாள் ஊர்வலம்

## தாய்மார்களுக்கு வேண்டுகோள்

சென்னை, செப். 13—

சென்னை அஞ்சுகம் இல்லத்தின் செயலாளர் திருமதி அலமேலு அப்பாத்துரை விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:—

"வருகிற 17-ம் நாள் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் -- தி.மு. கழகம் பிறந்த நாள் விழாவைச் சிறப்பாக கொண்டாடும் பொருட்டு, அன்று பிற்பகல் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த சென்னை மாவட்ட தி.மு. கழகம் ஏற்பாடு செய்துள்ளது; அதில் பங்கு பெறவேண்டுமென அஞ்சுகம் இல்லம் உறுப்பினர்களையும் -- தி. மு. கழகத் தாய்மார்களையும் -- சீரணி மகளிர்களையும் கேட்டுக்கொள்வதோடு, ஊர்வலத்தை சிறப்புற நடத்தித் தர வேண்டுகிறேன்."

# சேலம் உருக்காலை-- நிர்வகிக்கப் புதிய நிறுவனம்

## மத்திய அரசு முடிவு

புதுடில்லி, செப். 13—

சேலம் உருக்காலைத் திட்டத்தை நிர்வகிக்கப் புதிய நிறுவனம் ஒன்றை நிறுவ இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்த நிறுவனம் முற்றிலும் இந்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கும்; தொடக்கத்தில் அதன் அத்தாட்சி பெற்ற மூலதனம் ரூ. 100 கோடியாக இருக்கும்.

எவ்வளவு மூலதனத்துடன் இதைத் தொடங்க வேண்டும் -- பின்னர் மேற்கொண்டு எவ்வளவு முதலீடு செய்யவேண்டியிருக்கும் என்பதெல்லாம் அவ்வப்போதைய தேவைகளுக்கேற்ப முடிவு செய்யப்படும்.

'சேலம் ஸ்டீல் லிமிடெட்'டின் தலைமை அலுவலகம் சேலத்தில் இருக்கும்; இது பிறகு உருக்காலைகளுக்கென பொதுவாக நியமிக்கப்படும் நிறுவனத்தின் கிளையாகச் செயல்படும்.

சேலம் உருக்காலைத் திட்டம் 1,95,000 டன் உருக்குப் பொருள்கள் உற்பத்தி செய்யும் சக்தியுள்ளதாக இருக்கும்; அதற்கு ரூ. 340 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் கட்டுமான வேலைகள் விரைவாக முன்னேறி வருவதாக அதிகார வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

# 'ஒலிம்பிக் ஜோதி' அணைந்தது

## நான்காண்டுக்குப் பின் கனடாவில் மீண்டும் சுடர் விட்டு எரியும்

முனிச், செப். 13—

123 நாடுகள் பங்கேற்ற 20-வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்துவிட்டன; 'ஒலிம்பிக் ஜோதி' அணைக்கப்பட்டுவிட்டது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் மேற்கு ஜெர்மனியிலுள்ள முனிச் நகரில் இம்முறை நடைபெற்றது; அடுத்த ஒலிம்பிக் போட்டி 1976-ம் ஆண்டில் கனடாவில் -- மான்ட்ரீல் நகரில் நடைபெறும்.

இந்தத் தடவை நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் அமெரிக்காவுக்குப் பலத்த அடி கிடைத்திருக்கிறது; கடந்த 12 ஆண்டுகளாக அமெரிக்காவுக்குத்தான் அதிகத் தங்க மெடல்கள் கிடைத்துவந்தன; இந்த ஆண்டில் அந்தப் பெருமையை அமெரிக்கா இழந்துவிட்டது.

கடந்த 80 ஆண்டு ஒலிம்பிக் வரலாற்றில் 50 தங்க மெடல்களைப் பெற்றுள்ள மூன்றாவது நாடு இரஷ்யா; 1904-ம் ஆண்டில் அமெரிக்கா 70 தங்க மெடல்களைப் பெற்றது; 1908-ம் ஆண்டில் இங்கிலாந்து 56 மெடல்களைப் பெற்றது.

முனிச் விளையாட்டுப் போட்டியில் இரஷ்யா 50 பொன் — 27 வெள்ளி — 22 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடம் வகித்தது.

அமெரிக்கா 30 பொன் — 31 வெள்ளி—30 வெண்கலப் பதக்கங்கள் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றது.

கிழக்கு ஜெர்மனி 20 பொன்— 23 வெள்ளி—23 வெண்கலப் பதக்கங்கள் பெற்று மூன்றாவது இடத்தை அடைந்தது.

மேற்கு ஜெர்மனி 13 பொன்—11 வெள்ளி—16 வெண்கலப் பதக்கங்கள் பெற்றது.

ஜப்பான் 13 பொன்—8 வெள்ளி—8 வெண்கலப் பதக்கங்கள் பெற்றது.

இந்தியா ஒரே ஒரு வெண்கலப் பதக்கத்துடன் நாடு திரும்புகிறது.

# பாகிஸ்தான் ஆக்கி ஆட்டக்காரர்கள் கலந்துகொள்வதற்குத் தடை

## ஒலம்பிக் குழு முடிவு

ஆக்கி விளையாட்டின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பதக்கங்கள் வழங்குகையில்; தோல்வியுற்ற பாகிஸ்தான் ஆக்கி ஆட்டக்காரர்கள் கண்ணியக் குறைவாக நடந்து கொண்டனர்.

1976-ம் ஆண்டில் மாண்ட்ரீலில் நடைபெறவிருக்கும் ஒலம்பிக் போட்டி வரையில் பாகிஸ்தான் ஆக்கி ஆட்டக்காரர்கள் எந்த அனைத்து நாட்டுப் போட்டியிலும் கலந்துகொள்ளக் கூடாது என்று ஒலம்பிக் குழு முடிவு செய்தது.

மேற்கு ஜெர்மனியிடம் தோல்வியடைந்த பாகிஸ்தான் ஆக்கி ஆட்டக்காரர்கள் 11 பேர்களும் இனி எந்த ஒலிம்பிக் பந்தயத்திலும் கலந்துகொள்ளக் கூடாதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பதினொரு ஆட்டக்காரர்களுக்குத்தான் தடையே தவிர வேறு புதிய ஆட்டக்காரர்களைக் கொண்டு ஒலம்பிக் ஆக்கிப் போட்டியில் பாகிஸ்தான் பங்கு பெறலாம்.

ஆனால் இன்று நான்கு ஆண்டுகளுக்கு அனைத்து நாட்டு ஆக்கிப் போட்டிகள் எதிலும் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ளக் கூடாது; அதாவது, அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் நடக்கும் ஆக்கி விளையாட்டிலும் -- 'உலக ஆக்கிக் கோப்பை'க்கான போட்டியிலும் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ள இயலாது.

### பூட்டோ கண்டனம்

ஒலிம்பிக் குழுவின் இந்த நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ கண்டனம் தெரிவித்திருக்கிறார்; 'ஒலிம்பிக் குழு தனது முடிவைத் திரும்பப் பெற வேண்டும்; இன்றேல், அனைத்து நாட்டு ஆக்கி சங்கத்திலிருந்து பாகிஸ்தான் விலகிக் கொள்ளும்; பாகிஸ்தான் தலைமையில் புதிய ஆக்கி சங்கம் உருவாக்கப்படும்' என்று கூறியிருக்கிறார்.



# 16,000 பட்டதாரிகள் வேலை இழந்துவிடுவராம்

## நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் நிலை

### ஆய்வு அறிக்கை தரும் தகவல்கள்

புதுடில்லி, செப். 12 —

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1973 – 74) இறுதியில் சுமார் 16 000 வேளாண்மைப் பட்டதாரிகளும், பட்ட மேற்படிப்பில் பட்டம் பெற்றவர்களும் வேலை இழந்தவர்களாக ஆகிவிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

"எனவே வேளாண்மைப் படிப்பு சம்பந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கையையும் -- அவற்றில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையையும் விரிவுபடுத்த 5-வது ஐந்தாண்டுக் காலத்தில் எந்த ஏற்பாட்டையும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இராது"

என்று, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வு கூறுகிறது.

"நாட்டில் உள்ள வேளாண்மைக் கல்லூரிகள் -- கால்நடை மருத்துவக் கல்லூரிகள் -- வேளாண்மைப் பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் இப்போது சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் அளவும், இப்போது வேலையில்லாமல் உள்ள விவசாயப் பட்டதாரிகள் -- பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்றவர்கள் ஆகியவர்களின் அளவும் வேளாண்மைத் தொடர்பான இப்போதைய தேவைகளையும் -- புதிதாக ஏற்படக்கூடிய தேவைகளையும் சமாளிக்கப் போதுமானவையாக இருக்கும்" என்று அது பரிந்துரைத்திருக்கிறது.

### வேலை இழப்போர் விவரம்

இந்திய வேளாண்மைக் கழகத்தின் ஆய்வு மேலும் கூறுவதாவது:—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் வேலை இழப்பவர்களில் வேளாண்மைப் பட்டதாரிகள் 9 000 பேர் இருப்பார்கள்; பட்ட மேற்படிப்பில் பட்டம் பெற்றவர்கள் 4,660 பேர் இருப்பார்கள்; வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகள் 700 பேர் இருப்பார்கள்.

### புதிய பட்டதாரிகள்

5-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 40,000 பேர் வேளாண்மைப் பட்டதாரிகளும் — கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலிருந்து 4,200 பட்டதாரிகளும் -- பொறியியல் பட்டதாரிகள் 1,400 பேர்களும் புதிதாக வெளிவருவார்கள்.

### உண்மையான சவாலை எதிர்பார்க்க வேண்டும்

வேளாண்மைப் பட்டதாரிகட்கு வேலை வாய்ப்புக்களும்--தொழில் நடத்தும் வாய்ப்புக்களும் புதிதாக உருவாக்க வேண்டியது அவசியம்; பல்வேறு துறைகளில் இவை உருவாக வேண்டும்.

வேளாண்மைக் கல்வியைப் பொறுத்த வரையில், இனிமேல் தரம் -- செய்திறன் -- அனுபவம் தொடர்பான பணியில் திறமை ஆகியவற்றை வலியுறுத்த வேண்டியது அவசியம்; எனவே, வேளாண்மைக் கல்வித் துறையில் அடுத்த 10 ஆண்டுகளில் உண்மையான சவாலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

### உரிய முதலீடு உண்டா?

சென்ற இரண்டு ஆண்டுகளில் வேளாண்மைப் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அநேகமாக இரு மடங்காக ஆகியிருக்கிறது; ஆனால் நிதி முதலீடு இந்த வளர்ச்சிக்கு ஏற்றதாக இல்லை.

5-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில ஒவ்வொரு பல்கலைக் கழகமும் தனது மேம்பாட்டுப் பணிகளுக்கு அவசியமான திட்டத்தை உருவாக்குமாறு பார்த்துக்கொள்வது அவசியம.

புது வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் திறம்பட செயல்படும் நிலையை அடைந்திடப் போதுமான நிதி வசதி அளிப்பது அவசியம்.

தங்களது வளர்ச்சித் திட்டங்களுக்காக உலக பாங்கியின் உதவியை சில வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் பெறக்கூடும்; அத்தகைய பல்கலைக் கழகங்களுக்குத் தனிச் சலுகைகள் தரப்படவேண்டியிருக்கலாம்.

மற்ற தொழில் நுணுக்கக் கல்விக்கு இணையானதாக வேளாண்மைக் கல்வியை உயர்த்திட மாணவர் படிப்பு உதவித் தொகைகள்--'ஸ்காலர்ஷிப்'புகள் ஆகியவற்றின் அளவை உரிய வகையில் அதிகப்படுத்த வேண்டியிருக்கலாம்; வெளிநாடுகளில் மேல்நிலைப் பயிற்சி பெறுவதற்கும் வகை செய்ய வேண்டும்."

# தொழில் நுணுக்கக் கல்வியின் தரத்தை உயர்த்த வலியுறுத்தல்

## ரூ. 225 கோடி திட்டத்தின் குறிக்கோள்

புதுடில்லி, செப்.—

1974 ஏப்ரல் 1-லிருந்து துவங்கும் ஐந்தாவது திட்டக் காலத்தில் தொழில் நுணுக்கக் கல்விக்காக வகுக்கப்பட்டுள்ள ரூ. 225 கோடி நகல் திட்டத்தில், தொழில் கல்வியை விரிவுபடுத்துவதை விட அதன் தரத்தை மேம்பாடு செய்வதே அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சகத்தின் தொழில் நுணுக்கக் கல்விப் பிரிவு இந்த நகல திட்டத்தைத் தயாரித்திருக்கிறது.

6-வது திட்டத்துக்கும் பொறியியல் துறையில் ஆள் பலம் எவ்வளவு தேவைப்படும் என்பதைத் திட்டவட்டமாக மதிப்பிடும்வரையில், தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள பொறியியல் பட்டதாரிகள் 25 000 பேர் -- டிப்ளமாக்காரர்கள் 50,000 பேர் என்பதற்கு மேல் சேர்த்துக் கொள்ளும்படியான விரிவமைப்புகள் கூடாது என்பது இக்குழுவின் கருத்தாகும்.

தற்போது செய்யப்பட்டுள்ள 30 சதவிகிதக் குறைப்பை நீக்கிவிட்டால், 5-வது திட்டத் தேவைகளுக்குத் தற்போதைய வசதிகளே போதும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தற்போது 17,000 பட்டதாரிகளைத் தரக்கூடிய 120 முதல்தர பொறியியல் கல்லூரிகளும் -- 22,000 டிப்ளமாக்காரர்களைத் தரக்கூடிய 300 பாலிடெக்னிக்குகளும் உள்ளன; இவற்றை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்படவில்லை.

கரக்பூர், கான்பூர், சென்னை, பம்பாய், டில்லி ஆகிய ஐந்து இடங்களில் உள்ள டெக்னலஜி கழகங்களில் (ஐ.ஐ.டி.) பட்டப் பிறகால வகுப்புக்களில் சற்று கூடுதலாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம்; தற்போது இந்தக் கழகங்களில் ஒவ்வொன்றிலும் 1,250 முதல் 1,500 பேர் முதல் டிகிரி படிப்பிலும், பட்டம் பிற்கால ஆராய்ச்சித் துறைகளில் 600 பேர் முதல் 800 பேர் வரையிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

பெங்களூரில் உள்ள இந்திய விஞ்ஞானக் கழகம், ஆராய்ச்சித் துறை பொறியாளர்களுக்கும் -- விஞ்ஞானிகளுக்கும் இன்னும் நல்ல பயிற்சி அளிக்கும்படியாக அதிலுள்ள ஆராய்ச்சி வசதிகள் விரிவுபடுத்தப்படும்; இக்கழகம் தொழில் துறை ஆராய்ச்சியிலும், 'டிசைன்' திட்டங்களிலும் விரிவாகப் பணியாற்றும்.

### திண்டுக்கல் 5-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றம்

திண்டுக்கல் 5-வது வட்டம் பொன்மனச் செம்மல் எம். ஜி. ஆர். மன்ற இரண்டாவது ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் 1--9--72 அன்று திண்டுக்கல் நகர் மன்ற உறுப்பினர் என். கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : கு. நாராயணசாமி; துணைத் தலைவர் : கே. வீருச்சாமி: செயலாளர் : இரா. சுப்பராயலு; துணைச் செயலாளர்கள் : ஏ. சாபுதீன், எம். கிருஷ்ணமூர்த்தி; பொருளாளர் : பி. சுப்பிரமணி; கௌரவ ஆலோசகர்கள் : வி. மருதராஜ், வி. சுப்பையா, சரவணன்.



# கலைஞரின் கனவு நனவாகச் செய்வீர்

## எதிர்காலத்தை உருவாக்குவதில் உறுதுணை புரிவீர்

### ஆசிரியப் பெருமக்களுக்கு நாவலர் வேண்டுகோள்

"கல்வித் துறையில் புரட்சிகரமான மாறுதல் அவசியம் தேவைப்படுகிறது; நாம் எங்கு இருந்து வந்தோம் என்பதில்தான், நாம் அதிக நாட்டம் செலுத்திக்கொண்டு இருக்கிறோம்; ஆனால், நாம் எங்கே போகவேண்டுமென்பதில் நாட்டம் செலுத்துவதில்லை; அதற்கு என்ன வழி முறைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதில் நாட்டம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"மாணவர்களுடைய திறமையை அளந்து பார்க்கக்கூடிய கருவிகள் என்ன என்ன? -- அவை எப்படிப்பட்ட கருவிகளாக இருந்தால் அவனுடைய முழுத் திறமையை அளந்து பார்க்க முடியும் என்பதற்கான ஆலோசனைகளை -- இந்தத் துறையில் 20 ஆண்டு அல்லது 30 ஆண்டு அனுபவம் பெற்று இருப்பவர்கள்தான் அதற்கான வழிவகைகளை எடுத்துச் சொல்லவேண்டும்; அந்த வழிவகைகளைச் சொல்லி-- அந்த முறைகளைக் கையாண்டு வந்தால்தான், பிறநாட்டாருடன் நாம் போட்டி போட முடியும்.

"30 ஆண்டுக் காலத்திற்கு முன்பு, 'ஒரு யானையின் விலை ஐந்து ரூபாய்; பத்து யானைகளின் விலை எவ்வளவு?' என்று மாணவர்களைக் கேட்டால், உடனே பெருக்கிக் கூட்டிக் கழித்து, 'ஐம்பது ரூபாய்' என்று பதில் சொல்லுவார்கள்; ஆனால் இப்பொழுது உள்ள மாணவர்கள், 'யானை ஐந்து ரூபாய்க்குக் கிடைக்காது' என்றுதான் முதலில் பதில் சொல்வார்கள்; ஆகவே, காலம் மாற மாற கல்வியில் மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கிறது.

"'படிப்பு எதற்கு' என்று கேட்டால் -- அறிவு பெறுவதற்குத்தான்; 'அறிவு பெறுவது எதற்கு' என்று கேட்டால், செயலாற்றத் திறமை பெருவதற்குத்தான்; 'அந்தச் செயலாற்றுத் திறமை' எதற்கு என்று கேட்டால் -- செய்து முடிப்பதற்குத்தான்; 'செய்து முடிக்க எதற்கு' என்று கேட்டால் -- வாழ்க்கையின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு செய்து முடிக்கின்ற ஆற்றல் ஒருவனுக்கு இருக்கவேண்டும்; அதற்குச் செயலாற்றுத் திறமை -- அறிவுத் திறமை வேண்டும்; அந்த அறிவுத் திறனைப் பெறுவதற்கு அவனுக்கு படிப்பு அவசியம் வேண்டும்; அந்தப் படிப்பு-- சொல்லிக் கொடுக்கத்தக்க அளவுக்குப் பாடங்கள் அமைய வேண்டும்; அந்தப் பாடங்களை அவனுக்கு விளக்கிச் சொல்ல திறமை மிக்க ஆசிரியர்கள் வேண்டும்.

'தமிழகத்தில் இருக்கின்றவர்கள் அத்தனைப் பேரும் அறிவு பெற்றோர்கள்--ஆற்றல் பெற்றோர்கள்--புகழால், வீரத்தால், இமயமலை அளவு உயர்ந்தார்கள்' என்று பிறநாட்டார் எடுத்துச் சொல்ல-- அது நமது செவிகளில் வந்து விழ--அதைக் கேட்டு நாம் மகிழ்ச்சி பெற--அப்படிப்பட்ட ஒருநாள் வரவேண்டுமென்று பாரதிதாசன் கனவு கண்டார் அந்தக் கனவை நனவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர் பெருமக்களைச் சார்ந்தது; நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் உறுதுணையாக நிற்க வேண்டும்"

—என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருச்சியில் ஆசிரியர் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டி உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வேண்டுகோள் விடுத்தார்.

திருச்சி நகரில் சுமார் ரூ. 2 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் ஆசிரியர் இல்லத்திற்கான அடிப்படைக் கல் நாட்டு விழா 4—9—72 அன்று திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்றது.

திருச்சி முதன்மைக் கல்வி அலுவலரும் -- ஆசிரியர் நலக் கழகத்தின் தலைவருமான திருமதி கிரிஜா சுவாமிநாதன் அனைவரையும் வரவேற்றார்.

விழாவிற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

கல்வி -- உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆசிரியர் இல்லத்திற்கான அடிக் கல்லை நாட்டினர்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் உருவப்படத்தை பள்ளிக் கல்வி இயக்குநர் சை. வே. சிட்டிபாபு திறந்து வைத்தார்.

திரு ஜி. பராங்குசம் எம்.எல்.சி.' வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல் ஏ., திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் சி. பா. பாரதி மற்றும் பலர் விழாவில் உரையாற்றினர்.

### மாவட்டந்தோறும் ஆசிரியர் இல்லங்கள்

"மாவட்டந்தோறும் ஆசிரியர் இல்லங்கள் நிறுவப்படவேண்டுமென்று பெரும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதைச் சிறப்புற நிறைவேற்றுகின்ற முயற்சியில் ஈடுபட்டு -- அத்தகைய முயற்சியில் வெற்றி கண்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் நலக் கழக உறுப்பினர்களையும், மற்றவர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

அனைத்து ஆசிரியர்களும் இதில் ஒருங்கிணைந்து நின்று மிகச் சிறப்பான முறையில் இதனை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதைக் கண்டு உள்ளபடியே பூரிப்பும் -- பெருமையும் கொள்கிறேன்.

அடிப்படைக் கல்லை நாட்டுகின்ற பணி இன்று தொடங்கப்பட்டிருப்பது மிக மிகப் பொறுத்தமுடைய ஒன்றாகும்; ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5-ம் நாளை ஆசிரியர் நாளாகப் பட்டி தொட்டிகளிலும், சிற்றூர் பேரூர்களிலும், நாடு நகரங்கள் அனைத்திலும் கொண்டாடப்படுகின்றது; ஆனால், அதற்கு ஒரு நாள் முன்னமேயே -- அதாவது செப்டம்பர் 4-ம் நாளன்று இந்த அடிப்படைக் கல் நாட்டுகின்ற பணி நிறைவேற்றப்படுவது மிக மிகப் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும்.

மாவட்டந்தோறும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதற்கிணங்க, முதன் முதலில் வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் எல்லாம் ஒருங்கேகூடி அங்கு ஒரு இல்லத்தைச் சிறப்பாக அமைத்தார்கள்; அவர்கள் அங்கு அடிப்படைக் கல்லை நாட்டாமல், ஏற்கனவே இருந்த ஒரு இல்லத்தை வாங்கிவிட்டதன் காரணமாக அங்கே இல்லத் திறப்பு விழா ஒருசேர நடைபெற்றுவிட்டது.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உதகையிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கொடைக்கானலிலும், தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூரிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்கள் தங்களுடைய ஒரு நாள் ஊதியத்தின் மூலமாக ரூ. 56,000 இதற்காகத் திரட்டித் தந்திருக்கின்றனர்; அத்துடன், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட நல நிதியிலிருந்து சுமார் ரூ. 50,000 தர இருக்கிறார்; அரசின் சார்பில் ரூ. 50,000 நன்கொடையாகத் தர இருக்கிறோம்.

### கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படும்

வெளியூரிலிருந்து வருகின்ற ஆசிரியர்கள் தங்கியிருப்பதற்கு இப்படிப்பட்ட இல்லங்கள் பயன்படும்; அது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் கூடி கலந்துரையாடிக் கல்வியின் தரத்தை வளர்க்க என்னென்ன வழிவகைகளைக் கண்டுபிடிக்கலாம் என்பவைகளைக் குறித்து கலந்து பேசவும், ஆசிரியர்களது அறிவுத் திறமையை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கும், கல்வியின் தன்மையை வளர்க்கவும் இப்படிப்பட்ட ஆசிரியர் இல்லங்கள் பயன்படும்.

அதுவும், அறிவியல் துறையில் வளர்ச்சி தேவை என்று கருதப்படும் இந்தக் காலத்தில், அந்த அறிவியல் துறையில் வளர்ச்சி பெறுவதற்கான வசதி வாய்ப்புகள் எல்லாம் பெறுவதற்கும் இப்படிப்பட்ட ஆசிரியர் இல்லங்கள் மூலம் அத்தகைய கருத்துக்களைப் பரப்புவதற்கும், ஒருவருக்கொருவர் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் இந்த இல்லங்கள் மிகவும் பயன்படும்.

இதனுடைய இருப்பிடங்களை -- உறையுள் வசதிகளை நாளுக்கு நாள் பெருக்கிக் கொண்டு போவதற்கான வழிவகைகளையும் நாம் தேட வேண்டும்.

இவைகளையெல்லாம் மற்றைய மாநிலங்கள் நம்மிடத்திலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கவே செய்கிறது

வேறு பல மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஏறக்குறைய 100-க்கு 96 சதவிகிதம் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் இங்கே இருக்கிறார்கள்; பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டுதான் இங்கே பாடம் கற்பிக்கத்தக்க சூழ்நிலையை நாம் பெற்றிருக்கிறோம்.

வேறு சில மாநிலங்கள், 100-க்கு 45 சதவிகிதம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டுதான் பாடங்களைக் கற்பிக்கத்தக்க சூழ்நிலையைப் பெற்றிருக்கின்றனர்.

ஆகவே, தமிழகம் இதில் தலைநிமிர்ந்து நிற்கத்தக்க அளவுக்கு இங்கே சிறந்த முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்துப் பாடம் கற்பிக்கப்படுகிறது.

### ஆசிரியர்களின் பெரும் பொறுப்பு

நம் நாட்டினுடைய எதிர்காலம் குழந்தைகளின் இந்தத் தலைமுறையைப் பொறுத்தே இருக்கிறது; இன்றையத் தலைமுறையின் குழந்தைகளை எப்படி வளர்க்கப்படுகின்றனரோ அப்படித்தான் எதிர்காலமும் அமையும்; எதிர்காலத்தில் எல்லாத் துறைகளுமே அவர்களின் கையில்தான் இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

குழந்தைகளை எப்படிப்பட்ட அறிவு உள்ளவர்களாக -- ஆற்றல் உள்ளவர்களாக -- பண்பாடு உடையவர்களாக வளர்க்கப்படுகிறார்களோ, அப்படித்தான் எதிர்காலம் அமையும்; அவர்களை உருவாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்கள் கையில்தான் இருக்கிறது.

25 ஆண்டுகட்குப் பிறகு ஒருவனைத் திருத்துவது என்பது எளிதான செயல் அல்ல; மாணவ இயல்புகளைத் திருத்துகின்ற பருவமே பள்ளிப் பருவம்தான்!

சாதாரணமாகக் குழந்தைகளை எல்லோரும் பெற்றெடுக்கிறார்கள்; முட்டாள்களும் -- திருடர்களும் -- நயவஞ்சகர்களும் -- குடிகாரர்களும் -- ஒழுக்கங்கெட்டவர்களுமாகம் பெற்றெடுக்கிறார்கள்; ஆனால், அவர்களை எல்லாம் நல்லவர்களாகவும் -- வல்லவர்களாகவும் -- அறிவு, ஆற்றல் மிக்கவர்களாகவும் -- பண்பாடு உடையவர்களாகவும் வளர்க்கின்ற பெரும் பொறுப்பு ஆசிரியர்களையே சாரும்.'

# ஏமாவதி அணைக்கட்டில் ஊழல்

## காண்டிராக்டர்கள் வேலையைப் போட்டுவிட்டு ஓட்டம்

### கருநாடக முதலமைச்சர் வெளியிடும் தகவல்

பெங்களூர், செப். 13—

ரூ. 47 கோடி முதலீட்டில் செயல்பட்டுவரும் ஏமாவதி அணைக்கட்டுத் திட்டத்தில் பல ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக அரசு சந்தேகப்படுவதை அறிந்து, அத்திட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வேலை செய்துவரும் நூற்றுக்கணக்கான காண்டிராக்டர்கள் வேலையை விட்டு ஓடிவிட்டதாக, கருநாடக மாநில முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தக் காண்டிராக்டர்கள் பல முறைகேடான செயல்களிலும் ஈடுபட்டிருந்ததாகவும், காங்கிரசுக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வராது என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் தைரியமாக அப்படிச் செய்தனர் என்றும் முதலமைச்சர் அர்ஸ் தெரிவித்தார்.

## திருச்சி மாவட்டத்தில் நாவலர்

### பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

திருச்சி, செப். 12—

திருச்சி மாவட்டத்தில் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்; அதன் விவரம் வருமாறு:—

திருச்சி மாவட்டம் காதப்பாறை ஊராட்சிமன்றத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்துப் பேசினார்.

இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கும் ஆசிரியர் இல்லத்திற்கான அடிப்படைக் கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டார்; விழாவிற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தலைமைவகித்தார்.

புதுக்கோட்டை முன்மாதிரிப் பள்ளி தொடக்க விழாவில் கலந்துகொண்டார்; தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் சழகத் தலைவரும்—சட்டமன்ற உறுப்பினருமான கே. வி. சுப்பையா விழாவிற்குத் தலைமைவகித்தார்.

புதுக்கோட்டை நகரமன்றத்தின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பிலும் கலந்துகொண்டு நன்றி தெரிவித்துப் பேசினார்.

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசினர் பெண்கள் கலைக் கல்லூரிக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டார்.

புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற கல்வி ஆராய்ச்சி மற்றும் முதற் கதிர் வெளியீட்டு விழாவிலும் கலந்துகொண்டார்; இவ்விழாவிற்கு முன்னாள் அமைச்சர் சே. வி. சுப்பையா தலைமை வகித்தார்.

இறுதியில், தி. மு. க. சார்பில் புதுக்கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்; கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமை தாங்கினார்.

## சேலம் ஊர்வல வழக்குத் தள்ளுபடி

சேலம், செப். 13—

சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு நடைபெற்ற ஊர்வலம் பற்றிய வழக்கில் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் மற்றும் நால்வரை விடுதலை செய்து மாவட்ட மாஜிஸ்திரேட் பிறப்பித்த உத்தரவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட ரிவிஷன் மனுவை செஷன்சு நீதிபதி தள்ளுபடி செய்தார்.

1971 சனவரியில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தைவெட்டி தந்தை பெரியார், திருவாரூர் தங்கராசு, ஆர். நடேசன், பஞ்சமுத்து, பேராசிரியர் டி. வி. சொக்கப்பா ஆகியோர்மீது செயராமன் என்பவர் ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார்; ஊர்வலத்தில் இந்துக் கடவுள்களை ஆபாசமாக சித்தரிக்கும் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும், இது மக்களின் உணர்ச்சியைப் புண்படுத்தியதாகவும் அவர் தமது புகாரில் கூறியிருந்தார்.

யாருடைய மத உணர்ச்சிகளையும் புண்படுத்தும் நோக்கத்துடன் ஊர்வலம் நடத்தப்படவில்லையென்றும், மூட நம்பிக்கைகளை ஒழிக்கவே ஊர்வலம் நடத்தப்பட்டது என்றும் எதிரிகள் கூறிய வாதத்தை செஷன்சு நீதிபதி சாமிக்கண்ணு ஒப்புக்கொண்டார்.

ஊர்வலத்தில் இராமர் படத்தை விளக்குமாற்றால் எதிரிகள் யாரும் அடித்ததாக மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் செஷன்சு நீதிபதி கூறினார்.

## திருமணம்

திருவாரூர் நகராட்சி உறுப்பினர் டாக்டர் இரா. விசயராகவன் அவர்களின் மகள் செல்வி பூங்கோதை—செல்வன் கலியபெருமாள் ஆகியோர் திருமணம், 14—9—72 காலை 7 மணியளவில், திருவாரூர் ஆரூரான் திருமண மண்டபத்தில் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெறும்; அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பெரம்பலூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் ஜே. எஸ். இராசுவின் தங்கை ஜே. எஸ். பூங்கோதைக்கும்—செல்வன் த. தங்கராசுவுக்கும் 16–9–72 காலை 10 மணிக்கு பெரம்பலூர் இலட்சுமி திரையரங்கில் அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும்—திரு. து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

முன்னதாக, பெரம்பலூர் வெங்கடேசபுரத்தில் கட்டப்பட்டுள்ள திரு. ஜே. எஸ். இராசுவின் புதிய இல்லத்தை திரு. மு. அட்சய கோபால் தலைமையில் அமைச்சர் என். வி. நடராசன் திறந்துவைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] சென்னை [illegible] வெளியிடப்படுகிறது.

## மாயூரத்தில் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

மாயூரம் நகர தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா 15—9—72 முதல் 21—9—72 முடிய நாள்தோறும் கொண்டாடப்படுகிறது; அமைச்சர்கள்—கழக முன்னணிப் பேச்சாளர்கள் பங்கேற்கின்றனர்; இசை—கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்; விழாவில் பங்குபெறுவோர்:—

செப்.

15: எல். கணேசன் எம்.எல்.ஏ.
அறிவுடைநம்பி எம்.எல்.சி.
டி. வி. சம்பத் எம்.எல்.ஏ.

16: நாவலர்
மன்னை நாராயணசாமி
கா. சுப்ரவேலு

17: கே. ஏ. மதியழகன்
எல். கணேசன் எம்.எல்.ஏ.

18: கடலூர் வீரமணி
கே. விநாயகம்
என். வி. என். சோமு
தம்பிதேவேந்திரன் (ஏ. கே. சி. நடராசன் இன்னிசை)

18: அமைச்சர் இராமச்சந்திரன்
செ. கந்தப்பன் எம்.எல்.ஏ.
(மணி—சாமிதுமு கலைநிகழ்ச்சி)

20: திருவாரூர் தங்கராசு
கோ. சி. மணி எம்.எல்.சி.

21: கேரளசுந்தரம் எம்.சி.
சி. பி. சனகசபை எம்.சி.
நாகை பாட்சா

### வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

செப். 14 மாலை 4 மணி: மேச்கிரிமங்கலம் (மாயூரம் வட்டம்)—திருமண நிகழ்ச்சி; 6-30 மணி: கும்பகோணம்—குடியிருப்பு மனைப்பட்டா வழங்கு விழா.

செப். 15 மாலை: கோயமுத்தூர்—அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

செப். 16 காலை 9 மணி: திருவண்ணாமலை—நகராட்சி கடைகள் திறப்பு; 10 மணி: தேவனந்தல்—பள்ளிக் கட்டடத் திறப்பு; 11 மணி: ஆடையூர்—தானே இயங்கும் குடிநீர்த் தொட்டி திறப்பு; மதியம் 12 மணி: அடி அண்ணாமலை—பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 5 மணி: வேட்டவலம்—அரசினர் உயர்நிலைப் பள்ளித் துணைக் கட்டடத் திறப்பு; 6 மணி: திருவண்ணாமலை—பொதுக்கூட்டம்.

### அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் நிகழ்ச்சிகள்

செப். 14 காலை 7-30 மணி: திருப்பூர் வாலிபாளையம்—இரா. கந்தசாமி அவர்களின் திருமணத்தில் கலந்துகொள்ளல்; 9 மணி: மாங்தேகவுண்டன்புதூர் வடசித்தூர்—திரு. அப்பாச்சியப்பன் அவர்களின் திருமணத்தில் கலந்துகொள்ளல்; 11 மணி: புஞ்சைப் புளியம்பட்டி — திரு. பி. ஏ. சாமிநாதன் எம்.பி. அவர்களின் இல்லத் திருமணத்தில் கலந்துகொள்ளல்; மாலை: பொள்ளாச்சி — சட்டப்பேரவை உறுப்பினர் ஏ. பி. சண்முகசுந்தரம் ஏற்பாடு செய்யும் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

செப். 15: பொள்ளாச்சி—அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்; பிற்பகல் 3 மணி: பொள்ளாச்சி—டாக்டர் கே. வத்மநாபன் அவர்களின் திருமண வரவேற்பு விழா.

செப். 16 காலை: கோவை—அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்; மாலை: சிங்காநல்லூர் தொகுதி நிகழ்ச்சிகள்.

### விருதை ஜெயராஜ் நிகழ்ச்சிகள்

செப். 15: வெள்ளாளப்பட்டி; 16: இராமநாதபுரம்; 17: பரமக்குடி; 18: விருதுநகர்; 19: மதுரை; 20: சுசீந்திரம்; 21: திருப்புவனம்; 22: விருதுநகர்; 23: அம்பாசமுத்திரம்; 24: சிவகாசி; 29: மன்னிராஜபுரம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேலை, தாலி ஆகியவைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

விழாவுக்கு நகராட்சித் தலைவர் கே. டி. எஸ். மணி தலைமை தாங்குகிறார்.

திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி., சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால் எம்.எல்.சி. ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசுவர்.



நடக்க இருப்பவை

# அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

## 15-9-72

**வேளச்சேரி**

தி. மு. க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 7-மணிக்கு செங்குந்தர் தெருவில்; தலைவர்: த. செகநாதன்; பேசுவோர்: புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., தி.சு. இலட்சுமணன் எம்.பி., ஆர். எம். வீரப்பன், பம்மல் நல்லதம்பி, சி. இராமலிங்கம், ஆலந்தூர் பாலன், மற்றும் பலர்.

**தஞ்சை**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திலகர் திடலில்; தலைவர்: எஸ். பெத்தண்ணன்; பேசுவோர்: அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், எஸ். டி. சோமசுந்தரம், எஸ். நடராசன் எம்.எல்.ஏ., பி. எஸ். தங்கமுத்து, மா. கோவிந்தராசன், முகம்மது சாலி, வி. எஸ். இராமலிங்கம், வி. சேது, கு. சுல்தான் எம்.சி., டி. பி. கண்ணன் எம்.சி.

**மாயூரம்**

நகர தி.மு.க. சார்பில் இரவு 7-30 மணிக்கு நகரப் பூங்காவில்; தலைவர்: கோ. இரத்தினவேலு; பேசுவோர்: எல். கணேசன் எம்.எல்.ஏ., புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி., டி. வி. சம்பத் எம்.எல்.ஏ., இரெ. ஜோசம், இரா. கன்னையன், கே. எஸ். சண்முகம், துரை. தில்லைச் சிதம்பரம் (மாலை 6-மணிக்கு திருவெண்காடு டி. பி. சிப்பிரமணியம் குழுவினர் நாயன இசை; காலை 9-மணிக்கு நகரின் பல இடங்களிலும் கொடியேற்று விழா).

**அரியலூர்**

நகர தி.மு.க. சார்பில் இரவு 7-மணிக்கு ஒற்றுமைத் திடலில்; தலைவர்: கோ. சிவப்பெருமாள் எம்.எல்.ஏ.; பேசுவோர்: மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ., எஸ். சதாசிவம் எம்.எல்.ஏ., சின்னசாமி எம்.எல்.ஏ., கே. என். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., து. எத்திராசன், இரா. சின்னையன், த. ஆறுமுகம் எஸ். சிவசுப்பிரமணியம், பி. பழனிச்சாமி.

**ஆரணி**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கொசப்பாளையம் தர்மராசா கோவில் திடலில்; தலைவர்: எம். தெங்கன்; பேசுவோர்: துரைமுருகன் எம்.எல்.ஏ., ஏ. சி. நரசிம்மன் எம்.எல்.ஏ., தி. எத்திராசன், எம். இராசமாணிக்கம், ஆர். என். வீரபத்திரன், கே. பி. சுந்தரம், கே. முரகரி எம்.சி., எஸ். ஏ. கன்னையன் எம்.சி., எம். கே. ஏழுமலை, எம். செயராமன், ஏ. பி. கரிகாலன்.

**நிலக்கோட்டை**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: பழ வீரம்பன்; பேசுவோர்: சி. தமிழரசி எம்.சி., ஆ. முனியாண்டி எம். எல்.ஏ., மா. இராசாங்கம் எம்.பி., மற்றும் பலர் (ஆயிரம் ஏழைகட்கு உணவு அளிக்கப்படும்)

**திருப்பெரும்புதூர்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு பெரியகடை வீதியில்; தலைவர்: மா. கி. இராசாராம்; பேசுவோர்: டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., மு. மாசிலாமணி எம்.எல்.சி., டி. இராசரத்தினம் எம்.எல்.ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.பி., பி. சின்னசாமி, மு. சி. முனுசாமி, இ. முனுசாமி, டி. துரைசாமி மற்றும் பலர். (காலை 6-மணி முதல் 10-மணி வரை வட்டத்தின் பல ஊர்களிலும் கொடியேற்று விழா நடைபெறும்; இரவு 9-மணிக்கு கலை நிகழ்ச்சி நடைபெறும்).

**தர்மபுரி**

வட்ட—நகர தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணா மணி மண்டபத்தின்முன்; தலைவர்: தி. வே. வடிவேலன்; பேசுவோர்: அமைச்சர் க. இராசாராம் மற்றும் பலர் (6,400 ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்).

**கரம்பக்குடி**

நகர தி. மு. க. மற்றும் துணை மன்றங்கள் சார்பில் மாலை 7-மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: இரா. தங்கமணி; பேசுவோர்: சி. தமிழரசி, அ. பெரியண்ணன், பி. முருகையன், மு. சுந்தரக்கண்ணு, கோ. சக்கரபாணி.

## அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்: 15-9-72

**வண்ணைப் பகுதி**

வண்ணைப் பகுதி தி. மு. க. சார்பில் காலை 7-30 மணிக்கு அண்ணா சிலைக்கு மாலையணிவித்தலும்—பகுதிக் கழக அலுவலகத்தில் கொடியேற்றலும் நடைபெறும்; இரவு 7-மணிக்கு அண்ணா சிலை எதிரில் நீலநாராயணன் எம்.எல்.சி., தலைமையில்—ஆர். டி. சீதாபதி முன்னிலையில்—இசை முரசு நாகூர் அனீபா எம்.எல்.சி. குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

**திருவல்லிக்கேணி பகுதி**

அமைச்சர் நாவலர் அவர்கள் திருவல்லிக்கேணித் தொகுதியில் பல்வேறு இடங்களிலும் (81-வது வட்டம் முதல் 90-வது வட்டம் வரை) கொடியேற்றிவைப்பார்.

**சென்னை 4 வது வட்டம்**

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் காலை 9 மணிக்கு கம்மல்மோலு செட்டித் தெருவில் எஸ். தயாளன் தலைமையில் விழா நடைபெறும்; மு. வேதாசலம் எம்.எல்.ஏ., கே. எம். கண்ணபிரான் எம்.சி., பி. ஏ. என். இராசரத்தினம், இராசகோபால், பி. கே. மூர்த்தி, புலவர் செல்வராசன், பா. சோமசுந்தரம், ந. சண்முகம், என். வெங்கடேசன், மு. சொக்கலிங்கம் ஆகியோர் பேசுவர்.

**சென்னை 21-வது வட்டம்**

எம். ஜி. ஆர். நற்பணி மன்றச் சார்பில் காலை கொடியேற்றப்பட்டு இனிப்பு வழங்கப்படும்.

## காஞ்சியில் அண்ணா விளையாட்டு அரங்கம்

### போலீசு ஐ.ஜி. திறந்து வைத்தார்

காஞ்சிபுரம், செப். 13—

காஞ்சிபுரத்தில் போலீசு விளையாட்டு அரங்கம் ஒன்றை கடந்த ஞாயிறன்று போலீசு இன்ஸ்பெக்டர்—ஜெனரல் அருள் திறந்து வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு அருகில் ரூ 8,500 செலவில் கட்டப்பட்ட இந்த விளையாட்டு அரங்குக்குப் பேரறிஞர் அண்ணாவின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

இன்று இந்த விளையாட்டு அரங்கில்முதலமைச்சர் கலைஞர் போலீசு அதிகாரிகளுக்குப் போலீசு மெடல் வழங்கும் விழா நடைபெறுகிறது; அதுபோது அவருக்கு அளிக்கப்படவிருக்கும் அணிவகுப்பு மரியாதையின் ஒத்திகை ஒன்றையும் அருள் பார்வையிட்டார்.